சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கொளத்தூர் கிழக்கு பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் 103 வது பிறந்தநாள் புத்தெழுச்சி நாள் விழாவை முன்னிட்டு "புத்தெழுச்சி11, "கற்றவர் வியக்கும் தலைவர் காலத்தை வென்ற கலைஞர்!! எனும் தலைப்பில், மாபெரும் புகழரங்கம் பகுதி செயலாளர் ஜசிஎப் வ.முரளிதரன் தலைமையில் மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. முன்னிலையில் கழகத் துணைப் பொதுச்செயலாளர். திருச்சி என். சிவா எம்.பி, கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி பொதுச்செயலாளர் ஈ.ஆர் ஈஸ்வரன்,கழக சட்டத்திட்ட திருத்தக்குழு செயலாளர் இரா. கிரிராஜன் எம்.பி, பட்டிமன்ற பேச்சாளர் முனைவர் ம.எழிலரசி ஆகியோர் வாழ்த்துரைத்தனர். இவ்விழாவில் ப.ரங்கநாதன், எ.நாகராசன் எம்.சி, கே.சந்துரு, சி.மகேஷ் குமார், சரிதா மகேஷ் குமார், தேவஜவகர், எஸ்.பன்னீர்செல்வம், எஸ்.தனசேகர் மற்றும் கழக நிர்வாகிகள் செயல் வீரர்கள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திருவொற்றியூர் மேற்குப் பகுதி 2வது வட்டம் சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா கொண்டாட்டம்!

வை.ம.அருள்தாசன் பங்கேற்பு! டி.சேகர் ஏற்பாடு!

சென்னை,ஜூன்.11-

ஜூன் 3 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திரு வொற்றியூர் மேற்கு பகுதி 2 வது வட்டத்தில் கழக இரு வண்ணக் கொடி யேற்றி அண்ணா முழு உருவ சிலைக்கு மாலை அணிவித்து இனிப்பு வழங்கி சிறப்பாக கொண் டாடப்பட்டது.

திருவொற்றியூர் மேற்கு பகுதி 2 வது வட்ட திமுக சார்பில் எண்ணூர் கத்தி வாக்கம் பஜார் வீதியில் 3-6-2026 காலை 10:00 மணியளவில் வட்ட கழக பொறுப்பாளர் டி.சேகர் ஏற்பாட்டில் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பகுதி கழக செயலாளர் வழக்கறி ஞர் வை.ம.அருள்தாசன் பங்கேற்று அண்ணா முழு உருவ சிலைக்கு மாலை அணிவித் தர்.

அதனைத் தொடர்ந்து அய்யா கலைஞர் அவர்க ளின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி கழக இருவண்ண கொடியேற்றி இனிப்புகள் வழங்கினார்.

இதில் பகுதி கழக நிர்வா கிகள் எம்.வஜ்ரவேல், மாவட்ட பிரதிநிதி எம்.சந் திரகுமார் மாவட்ட மீன வர் அணி துணை அமைப் பாளர்கள் தழவை எஸ். ரஞ்சித் டி.சக்கரவர்த்தி டி.எஸ்.மணி கே.பாலு, ஆர்.மதன்குமார், சி. சேகர், டி. கண்ணன், எஸ்.தேவி எஸ்.ராஜேஷ் ஜெ.மாரி முத்து, ஆர்.பாலாஜி, சாமுண்டீஸ்வரி, ஜி. கணேஷ், எஸ். கௌதம், பெரியநாயக ராஜா, டி. பாபு, வீ. தேசப்பன், ராஜா, ஹரி பாபு, கௌசிகன், ச. தருண் எஸ். வினோத், எஸ். ரமேஷ் ரோணி, மற் றும் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அ மை ப் பா ள ர் க ள் , மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், பாக முக வர்கள், கழக மூத்த முன் னோடிகள், கிராம நிர்வா கிகள் மற்றும் கழகத் தோழர்கள் திரளாக பங் கேற்றனர்.

புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில்! மாதவரம் வடக்குப் பகுதி திமுக சார்பில்

கலைஞர் பிறந்தநாள் விழா! செல்டர் குழந்தைகள் காப்பகத்தில் நலத்திட்ட உதவிகள்!

கே.கருணாகரன் – எஸ்.பாலாஜி – எம்.என்.அஜய் தென்னவன் – கே.சண்முகப்பிரியன் – எம்.ஜான்சன் பங்கேற்பு!

மாதவரம், ஜூன்.11-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார் பில் முத்தமிழறிஞர் கலை ஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு செல்டர் குழந்தைகள் காப் பகத்தில் நலத்திட்ட உதவி கள் வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி 17வது வட்டம் தீயம்பாக் கம் காந்திநகர் பகுதியில் அமைந்துள்ளது செல்டர் குழந்தைகள் காப்பகம். இந்த காப்பகத்தில் வசிக்கக் கூடிய அனைத்து குழந்தை களுக்கும், முத்தமிழ் அறி ஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அறுசுவை காலை உணவு மற்றும் நலத்திட்ட உதவி கள் வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் நடைபெற்றது நிகழ்ச்சிக்கு 17வது வட்ட செயலாளர் கே.கருணாகரன் தலைமை தாங்கினார்.

வட்ட நிர்வாகிகள் எஸ். பாலாஜி, சி.மூர்த்தி, வி. பார்த்தசாரதி, பகுதி இளை ஞரணி துணை அமைப்பா ளர் எம்.என்.அஜய் தென்ன வன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே.சண்முக பிரியன், மாவட்ட அமை ப்பு சாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் எஸ். சிவகுமார், மாவட்ட விவ சாய அணி துணை அமைப் பாளர்கள் டி.வினோத், ராஜ்குமார், பகுதி ஆதிராவி டர் நல குழு அமைப்பாளர் எஸ்.நாகராஜ், பாக முகவர் கள் டி.திவாகர், எம்.மைக் கேல், வி.சுமிர், கார்த்திக், இளைஞரணி அமைப்பா ளர் வக்கீல் எம்.என்.தளபதி, பி.செந்தில், கார்த்திக், எம். கோவிந்தன், சின்னத் தோப்பு ஜி.முனிவேல், தீயம்பாக்கம் எம்.ஜான்சன், ஜி.பூபாலன், சுதர்சன், தியாகி விஸ்வநாததாஸ் நகர் சுரேஷ், கொசப்பூர் விஷ்ணு, விக்கி உள்ளிட்ட நிர்வாகிகள் முன்னிலை வைத்தனர்.

குழந்தைகள் காப்பகத் தில் வசிக்கக்கூடிய குழந்தை களுக்கு கல்வி உபகரணங் கள் மற்றும் அறுசுவை காலை உணவை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் வழங்கினார்.

முத்தமிழ் அறிஞர் கலை ஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தங்க ளது காப்பகத்திற்கு நலத் திட்ட உதவிகளை வழங் கிய திராவிட முன்னேற்றக் கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு காப்பகத்தின் பராமரிப்பா ளர் நன்றி தெரிவித்தார்கள்.

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு 17 வது வட்டம் தீயம்பாக்கம் செல்டர் குழந்தைகள் காப்பகத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.வட்ட செயலாளர் கே.கருணாகரன், எஸ். பாலாஜி, எம்.என்.அஜய் தென்னவன், கே.சண்முகப்பிரியன், எம்.ஜான்சன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவொற்றியூர் மேற்கு பகுதி 2வது வட்ட திமுக சார்பில் வட்ட கழக பொறுப்பாளர் டி.சேகர் ஏற்பாட்டில் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் பேரறிஞர் அண்ணா முழு உருவ சிலைக்கு மாலை அணிவித்து கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி கழக இருவண்ண கொடியேற்றி இனிப்புகள் வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், துறைமுகம் மேற்கு பகுதி மாவட்ட இளைஞரணி சார்பில் கலைஞர் புத்தெழுச்சி நாள் விழாவை முன்னிட்டு "புத்தெழுச்சி–10", "எல்லோரும் உறவென்போம்! இறையாண்மை உயிரென்போம்!! எனும் தலைப்பில் மாபெரும் நல திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பா.ஜெகதீஷ் தலைமையில், மாவட்டக் கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ முன்னிலையில் 700 வட இந்தியர்களுக்கு நல திட்ட உதவிகளை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக இளம் பேச்சாளர் மு.ரோஜா ஆகியோர் வழங்கினர். பகுதி செயலாளர்கள் எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர், தொகுதி பார்வையாளர் இரா. நரேந்திரன், எம் விஜயகுமார், பி. ஸ்ரீராமுலு எம். சி, ராஜேஷ் ஜெயின் எம் சிஜி மகாதேவன், இசட் ஆசாத், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, வே.பரிமளம் எம்.சி., காக்கா எல்.நவீன் எம்.சி., ஆர்.கலைச்செல்வி மற்றும் கழக நிர்வாகிகள் செயல் வீரர்கள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கழக விவசாயத் தொழிலாளரணி துணைத் தலைவர்

விராலிமலை த.சந்திரசேகரன் தாயார் த.பிச்சையம்மாள் மறைவு!

கே.கே.செல்லபாண்டியன் – கழகத்தினர் அஞ்சலி!

புதுக்கோட்டை, ஜூன் 11-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், விராலிமலை சட்டமன்றத் தொகுதி விரா லிமலையைச் சேர்ந்த கழக விவசாயத் தொழிலாளரணி துணைத் தலைவரும், முன் னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவருமான த.சந்திரசேகரனின் தாயார் த.பிச்சையம்மாள் அவர்கள் நேற்று (10.06.2026புதன்) காலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகி றோம்.

அம்மையார் அவர்களது இறுதி ஊர்வல நல்லடக்கம் இன்று (11.06.2026 - வியா ழன்) காலை 10 மணியளவில் விராலிமலையில் உள்ள த.சந் திரசேகர் இல்லத்திலிருந்து நடைபெறுகிறது.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து மாவட்டச் செயலாளர் கே.கே.செல்ல பாண்டியன் உள்ளிட்ட ஏரா ளமான கழக நிர்வாகிகள் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

கழக விவசாயத் தொழிலாளரணி துணைத் தலைவர்

விராலிமலை த.சந்திரசேகரன் தாயார் த.பிச்சையம்மாள் மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

புதுக்கோட்டை, ஜூன் 11-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், விராலிமலை சட்டமன்றத் தொகுதி விராலிமலையைச் சேர்ந்த கழக விவசாயத் தொழிலாளரணி துணைத் தலைவரும், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவருமான த.சந்திரசேகரனின் தாயார் த.பிச்சையம்மாள் அவர்கள் நேற்று (10.06.2026 புதன்) காலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை,தாயாரை இழந்துவாடும்த.சந்திரசேகரன் மற்றும் அவர்தம் குடும்பத்தாருக்கு தொிவித்துள்ளார்.

6 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 26.01.1936

மறைவு 11.06.2020

முன்னாள் கழக தொழிலாளரணி செயலாளர்
முன்னாள் பொது செயலாளர் தமிழ்நாடு மின் கழக தொமுச

கிங்கார. இரத்தினசபாபதி M.A.,

இன்று எங்களை விட்டு பிரிந்த நாள்

முத்தமிழ் அறிஞர் கலைஞர் வகுத்த பாதையில்
அயராது உழைத்த உழைப்பாளரே
கழகத் தலைவர் தளபதியின் உறுதுணையோடு
கழகத் தொழிலாளர் அணிச் செயலாளராக
தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின்
பொதுச் செயலாளராக தொழிலாளர் வாழ்வு சிறக்க
பாடுப்பட்ட பாதுகாவலரே மலர்கள் உதிர்ந்தாலும் வாசம் மறையாது
நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள் அகலாது

என்றும் தங்கள் நினைவில்

என்றும் தலைவர் கலைஞர் வழியில்,
என்றென்றும் கழக தலைவர் அவர்களின் நிழலில்

செந்தில்நாதன் இரத்தினசபாபதி BE.,MBA.,

மற்றும் குடும்பத்தினர்கள்